## இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை – 2017

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 23 இலக்க இலங்கை தேசிய நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1998 இன் 53 ஆம் இலக்க இலங்கை தேசிய நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சட்டத்தின் 25(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவதம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்ததால் தொடர்ந்துவரும் நிதிக்கூற்றுக்கள் அடங்கியுள்ள அனேக மூலாதாரங்கள் பொருண்மை முறையில் பாதகமாக காட்டியுள்ளது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

மீளாய்வாண்டின் போது அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் அதிகார சபைக்கு மூலதனம் மானியங்கள் என கிடைத்திருந்த ரூபா 1,003,000,000 தொகை மற்றும் பல்வேறு முதலீட்டு செயற்திட்டங்களுக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,002,985,802 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03**

நியமத்தின் 12 பந்தியின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல் ஒன்று வேறு நிகழ்வு ஒன்று அல்லது நிலைமைகள் மீது பிரயோகமாகும் குறிப்பிட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமமொன்று காணப்படாத போது முகாமைத்துவத்தினால் கணக்கீட்டு நியமம் ஒன்று தயாரித்து பிரயோகிக்க வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் போது அதிகார சபைக்கு திறைசேரியினால் கிடைத்திருந்த மூலதன மானியங்கள் ரூபா 172,350,000 தொகை மற்றும் மீண்டுவரும் மானியம் ரூபா 343,050,000 தொகை மற்றும் அமைச்சில் இருந்து மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து மானியமாக கிடைத்திருந்த ரூபா 1,236,510,000 தொகைகளை கணக்கீடு செய்வதற்கான கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்காததுடன் ரூபா 343,050,000 மீண்டு வரும் பெறுவனவுகள் நேரடி வருமானம் என இனங்காண்பதற்கு பதிலாக ஏனைய அகல்விரிவான வருமானங்களின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 14(அ) பந்தியின் பிரகாரம் சொத்து விடயமொன்றின் மற்றும் தொடர்புடைய எதிர்கால நலன்கள் அல்லது சேவை சாத்தியக்கூறுகள் நிறுவனத்தை நோக்கி உள்வரும் சாத்தியத் தன்மை காணப்பட்ட போது அவற்றை நிறுவனத்தின் சொத்துக்கள் என இனங்காணப்பட வேண்டும். எனினும் அமைச்சின் மானியங்களின் கீழ் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்து பயன்படுத்தப்பட்டு காணப்பட்ட ரூபா 536,091,616 தொகைக்கான மூலதனச் சொத்துக்கள் மற்றும் பொலனறுவ செவனபிட்டிய மீன்கள் இனப்பெருக்க நிலையம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 238.84 மில்லியன் தொகை மூலதனச் சொத்துக்கள் மற்றும் அதற்கு நேரொத்த மானியங்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 47 பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி அதனது தாங்கக் கூடிய பெறுமதியில் இருந்து பொருண்மையாக வித்தியாசப்படும் போது, 03 வருடங்களுக்கு அல்லது 5 வருடங்களுக்கு ஒருமுறை மீள்மதிப்பீடு மேற்கொள்ளல் போதியளவான காணப்பட்ட போதிலும், அதிகார சபையின் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டான 1998 ஆண்டின் பின்னர் அனைத்து சொத்துக்கள் தொடர்பிலும் மீள்மதிப்பீடு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 64 பிரிவின் பிரகாரம் சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கை காலத்தை கணித்து வருடாந்த பெறுமானத்தேய்வு விகிதம் தீர்மானிக்கப்பட வேண்டுமெனினும், அதற்கு முரணாக அதிகாரச் சபையினால் தொழிநுட்பக் காரணங்களினால் விரைவாக காலவதியாகக் கூடிய கணினி மென்பொருட்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்காக 10 வருட ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்திற்காக பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) நியமத்தின் 90 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 17,609,995 மில்லியனிற்கான மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் தொடர்பாக விவரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் உயிரியல் ரீதியான சொத்து என இனங்காணக்கூடிய தாய்மீன் இருப்பினை கணக்கீடு செய்வதற்காக கொள்கையொன்று இனங்கண்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,730,759 இற்கான தாய்மீன் இருப்பு மற்றும் தாய்மீன்களின் ஆரம்ப இருப்பு மற்றும் இறுதி இருப்பு முறையே ரூபா 6,714,641 தொகை மற்றும் ரூபா 7,696,600 தொகைக்கான உயிரியல் ரீதியான சொத்துக்கள் என இனங்காண்பதற்கு பதிலாக விற்பனை கிரயத்திற்கு சீராக்கல் மேற்கொண்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 748,801 தொகை மிகையாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 309,945 தொகையான 06 பசு மாடுகளை கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டு கொள்கையொன்று நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி யிருக்கவில்லை.

(இ) கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டு பெறுமதிகளில் ஆகக் குறைந்த பெறுமதி இறுதி இருப்புக்களை பெறுமதி கணித்தல் அதிகாரசபையின் கணக்கீட்டு கொள்கையாக இருந்த போதிலும் இருப்பினை பெறுமதி கணிக்கும் போது அவற்றின் நிகர தேறிய பெறுமதியினை கணித்து கிரயத்துடன் இணக்கம் செய்யப்படாமல் இறுதி இருப்பு அதன் கிரயமாகிய ரூபா 43,506,282 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடை ஒதுக்கம் கணிக்கும் போது சீராக்கல் படி உட்படுத்தக் கூடாது எனினும் மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்க சீராக்கல் படியும் உட்படுத்தி கணித்திருந்தமையால் ரூபா 12,114,266 இனால் மிகையாக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான நட்டமும் அந்த தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரசபையினால் சுகாதார அமைச்சு, மேல் மாகாண மீன்பிடி அமைச்சு மற்றும் நாரா நிறுவனம் மற்றும் வேறு நிறுவனங்களுக்கு 2010, 2015, 2016 ஆண்டுகளின் போது காட்டப்பட்டிருந்த பிடிபன, பொலன்னறுவை, பனாப்பிட்டிய ஆகிய இடங்களில் அமைந்துள்ள ரூபா 5,000,000 தொகைக்கான மூன்று காணிகள் தொடர்பாக பெறுமதி மீளாய்வாண்டு இறுதி அளவிலும் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் காரணமாக காணிகளின் பெறுமதி அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) அதிகார சபையின் மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த 18 காணிகள் தொடர்பாக 114.6 ஹெக்டயர்களின் பெறுமதி 2017 திசெம்பர் 31 திகதி வரை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 05 வருடங்களை மிகைத்துள்ள கடன்பட்டோர்களுக்கான நூற்றிற்கு நூறு ஐயக்கடன் ஏற்பாடு ஒதுக்குவது அதிகாரசபையின் கொள்கையாக இருந்த போதிலும், 05 வருடங்களை மிகைத்துள்ள மொத்தப் பெறுமதி ரூபா 3,286,422 இற்கான கடன்பட்டோருக்கான நூற்றிற்கு நூறு வீதம் ஐயக்கடன் ஒதுக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) வங்கி இணக்கக் கூற்றில் இனங்காணப்படாத செலவு என காட்டப்பட்டிருந்த 2015 ஆண்டு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 937,450 தொகைக்கான 122 நேர் வங்கி செலவு வைத்தல்களை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 34,740,968 தொகை எனினும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 38,979,530 தொகை என காட்டப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 4,238,562 இற்கான வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருகவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

இடர்கடன் மீதி தொடர்பான ஆரம்ப மீதி, மாதாந்த தவணைகளின் எண்ணிக்கை, அறவிடப்பட்டுள்ள தவணைப்பணம் மற்றும் நிலுவையாக உள்ள தவணைப்பணம் மீதி என்பவற்றை காட்டக்கூடிய விரிவான பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 52,557,438 தொகைக்கான இடர்கடன் மீதியை மெய்மையாய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதுள்ளது.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

---

பின்வரும் இணக்கமின்மைகள் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 751 | நூலகத்திற்கு கிடைக்கும் அனைத்து புத்தகங்கள், சேர்வுப் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டுமெனினும், அதிகார சபையின் நூலகத்திலுள்ள 406 புத்தகங்களையும் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு சேர்ப்புப் பதிவேட்டில் உட்படுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க பொதுநிதி சுற்றறிக்கை யின் பந்திகள் 3.1.6 மற்றும் 3.1.7 | மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 310,235,285 இற்கான சொத்துக்கள் தொடர்பாக பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதற்காக அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (இ) | 2015 ஜூலை 14 திகதிய 03/2015 இலக்க பொது நிதி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 371(2) (ஆ) | (i) ஒரே விடயத்திற்காக ஒரே நாளில் ரூபா 100,000 தொகையினை மிகைத்து 07 சந்தர்ப்பங்களில் ரூபா 1,106,785 தொகை நிமித்த துணைக் கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. |
| | | (ii) அதிகாரசபையினால் 12 சந்தர்ப்ப ங்களில் வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 385,780 தொகைக்கான நிமித்தத் துணைக் கட்டுநிதி வழங்கப்பட்ட நாளில் இருந்து 06 மாதங்கள் விட தாமதித்து தீர்த்திருந்தது. |
| | . | (iii) 68 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 1,670,005 தொகைக்கான துணைக் கட்டுநிதி கருமம் முடிவடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. |
| | | (iv) அதிகார சபையினால் 2015 ஆண்டு முதல் வெளி நிறுவனங்களில் இருந்து பண்டங்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யும் போது முற்பணமாக 77 சந்தர்ப்பங்களில் பண்டங்கள் கிடைக்க முன்னர் செலுத்தியிருந்த கூட்டுத்தொகை ரூபா 9,950,836 தொகை மீளாய்வாண்டு இறுதி அளவிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் பிரிவு 6.5.1 | நிதிக்கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (உ) | 2016 ஏப்ரல் 25 திகதி 02/2016 இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பந்தி 9.1 | அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது ஓய்வுபெற்ற 07 உத்தியோகத்தர் களுக்கு மொத்த சம்பளத்தின் சீராக்கல் படியும் உட்பட பணிக்கொடை கணித்து கொடுப்பனவு செய்தமையால் ரூபா 351,291 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் நிதி வினைவுகள் ரூபா 34,740,968 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 36,533,378 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 1,792,410 இனால் வளர்ச்சி அடைந்திருந்தது. தாபனச் செலவு ரூபா 8,424,237 இனால் அதிகரித்திருந்த போதிலும் அரச மானியம் ரூபா 8,730,921 இனால் மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் மற்றும் ரூபா 3,450,000 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வளர்ச்சியை முக்கியமாக தாக்கியுள்ளது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 9,099,308 தொகைக்கான பற்றாக்குறை 2015 ஆண்டின் போது ரூபா 11,443,032 இற்கான மிகை வரை வளர்ச்சியடைந்திருந்த போதிலும், 2017 ஆண்டின் போது மீண்டும் ரூபா 34,740,968 இற்கான பற்றாக்குறை ஒன்றாகியிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் ஊழியர் வேதனம் மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 244,794,745 தொகையாக காணப்பட்ட அதிகார சபையின் பங்களிப்பு 2017 வருட இறுதியில் உள்ளவறு ரூபா 388,555,255 வரை வளர்ச்சியிடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

மீளாய்வாண்டின் போது அதிகார சபையின் குறிக்கோள்கள் நிறைவேற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது புத்தளம் மாவட்டத்தில் குஸலபங்கதெனிய மீன் இனப்பெருக்க நிலையம் அமைப்பதற்காக ரூபா 25 மில்லியன் தொகை மற்றும் பாறை மீன்களுக்காக மீன் இனப்பெருக்க நிலையம் நிர்மாணிப்பதற்காக ரூபா 25 மில்லியன் தொகை ஒதுக்கியிருந்த போதிலும், அவற்றில் முறையே ரூபா 6.17 மில்லியன் மற்றும் ரூபா 9.6 மில்லியன் எனப்படும் 15 சதவீதம் மற்றும் 5 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்த போதிலும் திட்டமிட்டிருந்தவாறு செயற்திட்டம் செயற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் நீருயிரின உற்பத்தியை அதிகரித்தல், தொழில் வாய்ப்புக்களை பிறப்பித்தல், வெளிநாட்டு செலாவணியை அதிகரித்துக்கொள்ளல், கடற்றொழிலாளரின் வருமானத்தை உயர்த்துதல் தனிநபர் மீன் நுகர்வினை அதிகரிக்கும் குறிக்கோளளுடன் மன்னார், ஹம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பு நீருயிரின கைத்தொழில் பூந்தோட்டங்கள் நிருவுவதற்காக ரூபா 500 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது ஒதுக்கியிருந்த போதிலும், அதற்காக ரூபா 68.16 மில்லியன் தொகை எனப்படும் 13.6 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. வனஉயிரின வலயகத்தில் அமைந்துள்ள திட்டமிடப்பட்ட காணி விடுவிக்கப்படாமையால் இந்த செயற்திட்டத்தை செய்வதற்கு முடியாதிருந்தது.

(இ) கடலோர கரை தீரத்தில் நண்டுகள் தோற்றுவிக்கும் நகரங்களை நிறுவுவதற்காக கல்முல்ல, ரெக்கவ மற்றும் ம(ர்)கீகேனி ஆகிய நகரங்களில் சுயதொழில் வலயங்கள் அமைப்பதற்காக ரூபா 100 மில்லியன் தொகை ஒதுக்கியிருந்த போதிலும் ரூபா 31.90 மில்லியன் எனப்படும் 31 சதவீதம் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அவற்றில் ரெகவ செயற்திட்டத்திற்காக ரூபா 23.31 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய 2 செயற்திட்டங்களுக்காகவும் ரூபா 8.59 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதில் தாமதத்தின் காரணமாக நிர்மாணவேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) (i) நாட்டில் மீன் உற்பத்தியை மற்றும் நுகர்வினை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் நன்நீர் உவர்நீர், கரையோர மற்றும் சமுத்திரத்தில் நீருயிரின வளர்ப்பினை அபிவிருத்தி செய்தல் அதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்கள் நிறைவேற்றிக்கொள்வதற்காக 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் வாழ்வின் எழுச்சி கடன்திட்டத்தின் மூலம் 6450 நலன்பெறுவோருக்கு ரூபா 229,035,250 தொகை வழங்கியிருந்த போதிலும் அந்த நிகழ்ச்சித்திட்டம் பின்வரும் காரணங்களினால் தோல்வியடைந்திருந்தது.

- நலன்பெறுவோரின் செயற்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களுக்கு இலகுவாக நெருங்குவதற்காக தேவையான இடம்சார் விபரங்கள் காணப்படாமை.
- நலன்பெறுவோர்களை தெரிவு செய்யும் போது அப் பிரதேசங்களில் காணப்படும் நீர் பற்றாக்குறை தொடர்பாக கவனம் செலுத்தாமை.
- நலன்பெறுவோருக்கு உரிய முறையில் பயிற்சி வழங்காமை.
- செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் வழங்கிய பொதுவான ஆலோசனைக் கொத்தின் பிரகாரம் ‘‘வாழ்வின் எழுச்சி’’ செயற்திட்ட உரிமையாளர்களின் கிராமிய அமைப்பு ஒன்று அல்லது மாவட்ட அமைப்பு ஒன்று நிருவப்பட வேண்டுமெனினும் அவ்வாறான கிராமிய அல்லது மாவட்ட அமைப்பு ஒன்று செயற்படாமை.
- நீருயிரின தொடர்செயல் நடவடிக்கை மேற்கொள்ளாமை.
- செயற்திட்டத்தை செயற்படுத்தி செல்லும் போது ஏற்படும் சிக்கல்கள் ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவினை வழங்குதல் தொடர்பான முறையான நிகழ்ச்சித் திட்டமொன்றும் காணப்படாமை.

(ii) அனுராதபுர மாவட்டத்தில் 04 வகையான செயற்திட்டங்களுக்காக 140 நலன்பெறுவோருக்கு கொடுப்பனவு செய்திருந்த ரூபா 7,561,000 தொகையில் 2017 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 3,055,375 தொகை திருப்பி அறவீடு செய்யவேண்டியிருந்த போதிலும், பணம் ஏதும் இதுவரை அறவீடு செய்திருக்காதததுடன் 139 செயற்திட்டங்களில் தெரிவு செய்பவையாக 39 செயற்திட்டங்கள் பௌதீக ரீதியாக பரிசோதனை செய்த போது ரூபா 1,259,500 தொகைக்கான வாழ்வின் எழுச்சிக் கடன் திட்டத்தின்

மூலம் கொடுப்பனவு செய்திருந்த 28 செயற்திட்டங்கள் 02 வருடங்கள் முதல் 5 வருடங்களை மிகைத்த காலம் முதல் செயற்படாமல் காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) அழகான ஆற்றுத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 50 மில்லியன் அமைச்சின் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு ரூபா 19.16 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் முறையான சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொண்டிருக்காமையால் செய்முறையில் செயற்படுத்தும் போது சிக்கல்கள் ஏற்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரை அழகான ஆற்றுத்துறை செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயலாற்றுகை 10 சதவீதத்தை விடக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் கண்டலம, தம்புலுஓயா, மின்னேரிய ஆகிய 3 நீர்த்தேக்கங்களைச் சேர்ந்த தற்காலிக ஆற்றுத்துறை நிர்மாணவேலைகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(ஊ) 2017 ஆண்டின் போது 24 மாவட்டங்களில் மீன் அங்கில்லன் வைப்புச் செய்யும் இலக்கு ரூபா 94.36 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது வைப்புச் செய்திருந்த தொகை ரூபா 79.55 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் ரூபா 14.81 மில்லியன் அங்கில்லன் வைப்புச் செய்யும் இலக்கினை நெருங்கி இருக்கவில்லை. கேகாலை, மன்னார், நுவரஎலிய, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நெருங்கியிருக்காத இலக்குகள் முறையே 40 சதவீதம், 70 சதவீதம், 48 சதவீதம் மற்றும் 69 சதவீதமாக இருந்தது.

(எ) பம்பல நன்நீர் இறால் வளர்ப்பினை முன்னேற்றுவதற்கான செயற்திட்டத்திற்காக 2017 மே 19 ஆந் திகதி ரூபா 20,032,180 தொகைக்கான ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த வேலைப் பெறுமதியில் 2017 திசெம்பர் 08 திகதி செய்த வேலைகளுக்காக ரூபா 13,382,238 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஜனவரி 08 திகதி மேலும் ஒரு மாதம் காலநீடிப்பு கேற்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இந்தச் செயற்திட்டத்தின், பௌதீக மற்றும் நிதி செயலாற்றுகை 100 சதவீதம் எனக் காட்டப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபையினால் பயன்படுத்தப்படும் 38.7526 ஹெக்டயர்கள் காணிகளின் உரிமை அதிகார சபைக்கு 2018 ஏப்ரல் 10 திகதி வரை உரித்தாக்கியிருக்கவில்லை.

(ஆ) இலங்கையின் பொருளாதார அபிவிருதி மற்றும் நிலைபேறான உணவு பாதுகாப்பினை இலக்காக வைத்து கடலோர நீருயிரின வளர்ப்பினை சுற்றாடல் பற்றுள்ள விதமாக முன்னேறுவதற்காக உண்மையான முதலீட்டாளர்களை இந்த பரப்புகளுக்கு ஈர்ப்பதற்காக பொருத்தமான சுற்றாடல் ஒன்றினை ஏற்படுத்தும் மற்றும் சுற்றாடல் பற்றுள்ள விதமாக மேற்கொள்ளப்படும் வளர்ப்பு விடயங்கள் மூலம் கடற்கரை ஓர மற்றும் சமுத்திரம் சார் நீருயிரின வளர்ப்பு விஷேடங்களின் உற்பத்தியை அதிகரிக்க செய்தல் மற்றும் பண்புசார் மட்டத்தை உயர்த்தும் குறிக்கோளுடன் மன்னார் மாவட்டத்தில் நீருயிரின வளர்ப்பு கைத்தொழில் நகர் ஒன்று நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 290 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்டில் நிர்மாண வேலை ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. 2018 மார்ச் அளவில் கணனியின் அளவை விடயங்கள், நீர் வசதிகள், எரிபொருள் மற்றும் வெளிநாட்டு பயிற்சி பெறல் ஆகியவற்றிற்காக ரூபா 8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று மேற்கொண்டிருக்காத சுற்றாடல் மதிப்பாய்வு அறிக்கை ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கைக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மற்றும் கடலோர பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(ii) இதன் காரணமாக மன்னார் நீருயிரின கைத்தொழில்நகர் இற்கான இனங்கண்டிருந்த காணி விடத்தல்தீவு இயற்கை காப்புக் காட்டில் அமைந்துள்ளதால் திட்டமிட்ட கைத்தொழில்நகரம் நிறுவுவதற்கு முன்னர் குறிப்பிட்ட காணிப்பகுதி வனசீவராசிகள் இயற்கை காப்புக்காட்டில் இருந்து சட்டரீதியாக நீக்குவதற்குத் தேவை என்றும் அதற்காக வனசீவராசிகள் மற்றும் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 2(4)அ மற்றும் 2(5) இன் பிரகாரம் நீக்குவதற்காக திட்டமிட்டுள்ள பகுதிக்காக சுற்றாடல் மதிப்பாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென 2017 ஜுலை 21 செயலாளர் அறிவித்திருந்த போதிலும், 2018 மார்ச் அளவிலும் செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. அதன் பிரகாரம் நீருயிரின வளர்ப்பு கைத்தொழில் நகரம் ஒன்று நிர்மாணிப்பதன் மூலம் நெருங்குவதற்கு இலக்காக இருந்த மேற்கூறிய குறிக்கோள் 2018 மார்ச் வரையிலும் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) 2017 ஆண்டிற்கான 31 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் நீருயிரின வளர்ப்பு நிலையங்கள் 08 தொடர்பாக ரூபா 1,499,541 இற்கான வருமானம் வங்கியில் இடுவதில் தாமதத்தின் காரணமாக சேகரிக்கப்படும் பணம் தகாத கையாளுதல்களுக்கு பயன்படுத்தும் வாய்ப்பு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் முகாமைத்துவத்திற்கு சுட்டிக்காட்டியிருந்த போதிலும் அந்த குறைப்பயன்பாட்டினை தவிர்த்துக் கொள்வதற்காக முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்**

வேக்கயா மீன் இனப்பெருக்கம் தொடர்பாக தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 3,874,592 தொகைக்கான நிதி உதவியுடன் 2005 செப்டம்பர் 28 திகதி நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தனியார் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்தது. எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாமையினால் தனியார் கம்பனியினால் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,581,867 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

104 ஏக்கர் விதைக்கும் பரப்பைக் கொண்ட உடவளவை நன்னீர் மீன்கள் இனவிருத்தி நிலையத்தின் குளம்கள் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த இடங்களில் இருந்து மண் அகற்றப்படும் போது இரத்தினப் படுகை வெளியிடப்பட்டிருந்தது. நிறுவனம் ஆக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு புறம்பாக உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் இன்றி 2016 திசெம்பர் 07 திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு இரத்தினக்கள் அகழ்வு அலுவலகங்களுக்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. அவ் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 திசெம்பர் 05 திகதி அளவில் ஒருவருடம் முடிவடைந்திருந்த போதிலும் உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் கிடைக்கும் இரத்தினக் கற்களை பகிரங்க ஏல விற்பனையின் மூலம் விற்பனை செய்து மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை கழித்த பின்னர் இலாபத்தில் 10 சதவீதம் அதிகாரச சபைக்கு கிடைக்க வேண்டுமெனினும் கணக்காய்வுத் திகதியாகிய 2018 மே மாதம் அளவிலும் அப்பணம் கிடைத்திருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தியின் இலக்குகளை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை தேசிய நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ் உள்ள கருமங்கள் தொடர்பாக செயற்பட்டிருந்ததெனவும், அதனோடு தொடர்புடைய கேள்வி கொத்தில் காட்டியிருந்த போதிலும், இலங்கை தேசிய நீருயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அதனது கருமங்கள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகளை நோக்கி நெருங்குவதை அளவீடு செய்வதற்காக சுட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்திருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள ரூபா 750 மில்லியனுக்கான நான்கு செயற்பாடுகளை செயற்படுத்துவதற்காக தேவையான உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட குறிக்கோள்கள், இலக்குகள், சேவைகள் மற்றும் தூரநோக்கு நிறைவேற்றி கொள்வதற்காக தேவையான செய்முறை தொடர்பாக முறையான மதிப்பாய்வு ஒன்று மேற்கொண்டு அதனது உச்சமட்டத்தில் பேணுவதற்காக தேவையான பயிற்றப்பட்ட பதவியணி ஒன்று உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகார சபையின் குறிக்கோள்களுக்கு நெருங்குதல் தொடர்பாக நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று நடைபெற்றிருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வுக் குழுக்கள்

2003 ஜூன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு குழுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட வேண்டுமெனினும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. மேலும் அக்குழுத் தீர்மானங்கள் செயற்படுத்துதல் மற்றும் தொடர்செயல் நடவடிக்கை எடுத்தல் பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

### 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செய்முறை

#### 6.3.1 பெறுகை

கஹமோதர நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம் நிர்மாணித்தல் தொடர்பாக கட்டிடங்கள் II மற்றும் III இன் ஒப்பந்தவேலை தொடர்பாக பரிசோதனையின் போது 2006 பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அவை பின்வருமாறு.

(அ) 4.3.2 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் பொறியியல் மதிப்பீடு அதிகார சபையின் தலைவர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் அங்கீகரித்திருக்கவில்லை.

(ஆ) 8.9 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் ரூபா 500,000 தொகையை விட மிகையான பொருத்துக்கள் தொடர்பாக சேவை உடன்படிக்கை கையொப்பமிடப்பட வேண்டும் எனினும் ரூபா 1,200,000 தொகை பெறுமதியான இரண்டு விடயங்கள் கஹதமோதர நிலையத்தில் பொருத்துவது தொடர்பாக சேவை உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) 8.14.1 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் ஒப்பந்த வேலையை நிரப்புவதற்காக பெறுகை நிறுவத்தை திருப்திப்படுத்தும் வகையில் உறுதிப்படுத்தல்கள் பெற்றிருக்கவில்லை.

(ஈ) 8.13.4 ஆம் பந்தியில் பிரிவு 6.7 இன் பிரகாரம் கஹதமோதர நன்னீர் இறால் இனப்பெருக்க நிலைய நிர்மாணிக்கும் வேலைகளை பரிசோதனை செய்த போது அதிகரித்து இருந்த மேலதிக வேலைகளின் பெறுமதியாகிய ரூபா 3,339,443 தொகை அதிகரிப்பு தொடர்பாக குறிப்பிட்ட பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தரினால் காரணங்கள் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.3.2 ஒப்பந்த வேலை நிருவாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இங்கினியாகல நீருயிரின வளர்ப்பு நிலைய 10 மீன் குளங்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 54,869,808 தொகைக்கான ஒப்பந்த வேலை தொடர்பான விலைகூறல் மதிப்பாய்வு மூலப் பிரமாணங்களின் பிரகாரம் கடந்த 5 வருடங்களில் நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதாக குறிப்பிட்டிருந்த 2012 ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒரு ஒப்பந்த வேலை மாத்திரம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2016 ஆகஸ்ட் 23 திகதி ஆரம்பிக்கப்பட்டு 180 நாட்களில் அதாவது 2017 பெப்ரவரி 23 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த ஒப்பந்தவேலை 2017 மார்ச் 30 திகதி அளவிலும் 32 சதவீதமான குறைந்த செயலாற்றுகை மட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தவேலை காலம் முடிவடைந்து 4½ மாதங்கள் கடந்திருந்த போதிலும் பொருத்தமில்லாத விதத்தில் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் மீண்டும் நிர்மாணவேலை மேற்கொள்வதற்கு ஒப்பந்த கம்பனிக்கு இயலாமையால் 2017 நவம்பர் 08 திகதி ஒப்பந்த வேலையை கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 18,706,835 இற்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்யாமயால் 10 மீன் குளங்கள் இலக்காகியிருந்த ரூபா 4,800,000 தொகை பெறுமதியை கொண்ட அஸித்தன் உற்பத்தி ஒன்றும் மற்றும் ரூபா 2,400,000 தொகை பெறுமதியைக் கொண்ட அங்கில்லன் உற்பத்தி ஒன்றினையும் அதிகார சபை இழந்துள்ளது.

(ஆ) ரூபா 50 மில்லியனுக்கான அமைச்சின் நிதி ஏற்பாடுகளின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்த அழகான ஆற்றுத்துறை எண்ணக்கரு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் ஒரு ஆற்றுத்துறைக்கு ரூபா 2.8 மில்லியன் அண்மித்த தொகையொன்று செலவிட நேரிடும் தற்காலிக கன்டேனர் உடனான நடமாடும் கடற்தொழிலாளர் ஓய்வு விடுதி, நீர்பாசன அல்லது வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தில் தேவையொன்றின் போது நிபந்தனைகள் ஏதும் இன்றி அகற்றிக்

கொள்வதற்காக அதிகார சபை பொறுப்பாக உள்ளமையால் காப்பு வலயங்களில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த தற்காலிக நிர்மாணவேலைகள் ஏதேனும் தேவையின் போது அகற்றிக் கொள்வதற்கு நேரிடின் அந்த நிர்மாண வேலைகளுக்காக செலவிடப்பட்ட செலவுகள் பயனற்ற செலவுகளாக மாறும் என்ற தவிர்க்கமுடியாத ஆபத்து ஒன்று காணப்பட்டது. கன்டேனர் மண்டபம் பொருத்துவதற்காக 2017 ஆண்டு இறுதியளவில் ரூபா 7,573,730 மில்லியனிற்கான முற்பணம் செலுத்தல் ஒன்று நடைபெற்றுள்ளது.

(இ) பொலன்னறுவை - ஸெவனபிட்டிய மீன் இனவிருத்தி நிலையம் நிர்மாணிப்பதற்காக ரஜரட நவோத்தய ஜனாதிபதி நிகழ்ச்சித் திட்டம் 2016-2018 புத்துயிர் பெரும் பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் ரூபா 430 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. அலுவலக கட்டிடம், உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதிகள், நீர்த்தேங்கு தொட்டி மற்றும் நீர் வழங்கள் முறைமை உட்பட பூரணமான இனப்பெருக்க நிலையம் நிறுவுவதற்காக காணியில் பொருத்தமான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்படாமல் நிர்மாணவேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கஹந்தமோதர நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையம் 03 கட்டங்களின் கீழ் நிர்மாணிப்பதற்காக ரூபா 29,641,017 இற்கான பெறுமதிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட பொறியியல் நிறுவனம் ஒன்று உடன் ரூபா 24,201,680 தொகைக்கான ஒப்பந்த வேலை உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருந்த போதிலும் 03 கட்டங்களுக்குமாக செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 33,804,849 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அக்கொடுப்பனவில் நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக கொடுப்பனவு செய்தல் மற்றும் உரிய விவரக் குறிப்புக்களுக்கு இணக்கமின்மை ஆகிய காரணங்களினால் ரூபா 2,815,123 இற்கான மேலதிகமான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) உடவலவ புதிய மீன் இனப்பெருக்க நிலையம் ஒன்று மற்றும் திலாபியா இனப்பெருக்க நிலையம் நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 84.5 மில்லியன் மற்றும் ரூபா 7.27 மில்லயின் செலவீடு செய்வதற்காக மதிப்பீடு செய்திருந்த போதிலும் பெறுகைக்கான திட்டத்திற்கு புறம்பாக முறையே ரூபா 150.3 மில்லியன் தொகை மற்றும் ரூபா 17.8 மில்லியன் தொகைகளுக்காக உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிர்மாண வேலைகள் செய்யப்பட்டிருந்தன.

### 6.3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

2017 ஆண்டின் போது தம்புள்ள மீன் மரபணு அபிவிருத்தி நிலையம் நிர்மாணிப்பதற்காக ரூபா 50 மில்லியனுக்கான மூலதன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 47,153,130 தொகை கிடைத்திருந்தது. அதன் கீழ் மீன் மரபணு ஆய்வுகூடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 17 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு 2017 ஜூன் 02 ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் நடைபெறுவேலையாகக் காணப்பட்டது.

### 6.4 சுற்றாடல்சார் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

கஹந்த மோதர நன்னீர் இறால் இனப்பெருக்க நிலையத்திற்கான மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் 2017 மார்ச் 14 ஆம் திகதி முதல் 2020 மார்ச் 13 வரை வழங்கியிருந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் பிரிவு 2.1 இன் பிரகாரம் உற்பத்தி செய்முறையின் மூலம் பிறப்பிக்கும் கழிவு நீரை சுத்தம் செய்து சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் இந்த நிலையத்தின் கழிவுப்பொருட்கள் சுத்தம் செய்து இடம் ஒன்று நிறுவப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுப் பரிசோதனை நடைபெற்ற சந்தர்ப்பத்தில் B இலக்கங் கொண்ட இனவிருத்தி நிலையத்தில் இருந்து அகற்றப்படும்

கழிவுநீர் சுத்தம் செய்யும் இடத்தின் ஊடாக செல்லாமல் வேறு குழாய் ஒன்றின் மூலம் கடலேரிக்கு விடுவிக்கப்பட்டு காணப்பட்டது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதி முகாமைத்துவம் | நேரடி வைப்புக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமை, கடன் வழங்கும் போது கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்குகள் பேணப்படாமை மற்றும் தொடல்செயல் நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) நிதிப் பிரமாணங்கள் 485 இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்க கடன் முற்பணங்கள் வழங்கும் போது துணைப் பதிவேடு ஒன்று பேணப்படாமை. |
| | | (ii) கொள்வனவு முற்பணங்கள் 2015 ஆண்டு முதல் தீர்த்திருக்காமை. |
| | | (iii) கொள்வனவு மற்றும் கொடுப்பனவு இடையே உள்ளகச் செவ்வை ஒன்று நடைபெறும் விதத்தில் வேலைப் பகிர்வு செய்திருக்காமை. |
| | | (iv) அறவிடப்பட வேண்டிய தவணைப் பணங்கள் அறவிடப்பட்டிருக்காமை. கடன் பதிவேடுகள், நாளது வரை ஆக்கப்படாமை. |
| | | (v) நலன்பெறுவோர் தெரிவு செய்தல் மற்றும் பயிற்சி பெறல் பலவீன நிலையில் காணப்படல். |
| | | (vi) உத்தியோகத்தர்களினால் தொடர் செயல் நடவடிக்கை மேற்கொண்டி ருக்காமை. |
| | | (vii) பொது ஆலோசனைக் கோவையின் பிரகாரம் செயற்படாமை. |
| | | (viii) செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகிய கடற்தொழிலாளரின் பொருளாதாரத்தை வலுப்படுத்தல் நடைபெற்றிருக்காமை மற்றும் செயற்திட்டம் தோல்வியடைந் திருத்தல். |
| (இ) | பதவியணி நிருவாகம் | பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | உள்ளகக் கணக்காய்வு | போதியளவான மற்றும் தகைமையுடைய பதவியணியொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | ஒப்பந்த வேலை நிருவாகம் | (i) காலநீடிப்பு செய்யும் போது பெறுகைகள் அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட்டிருக்காமை மற்றும் அவற்றிற்கான சான்றுகள் காணப்படாமை. |
| | | (ii) கோவைகள் பேணப்படும் போது தேவையான தகவல்கள் உட்படுத்தாமை மற்றும் கோவைகள் நாளது வரை ஆக்கப்படாமை. |
| | | (iii) தேவையான அங்கீகாரங்கள் கோவைகளில் உட்படுத்தியிருக்காமை. |